திருவொற்றியூரில் தாய், தம்பி கொலை செய்யப்பட்ட சம்பவம்

வெளிநாட்டில் இருந்து கணவர் திரும்புவதில் தாமதம்

■ பாஸ்போர்ட்டை புதுப்பிக்காததால் சிக்கல்

■ கைதான கல்லூரி மாணவன் கதறி அழுதார்

சென்னை, ஜூன் 24: திருவொற்றியூரில் தாய், தம்பியை கத்தியால் குத்தி உடல்களை சாக்குமூட்டையில் கட்டிய சம்பவத்தில், கொலையுண்ட பெண்ணின் கணவர் வெளிநாட்டில் இருந்து திரும்புவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் கொலை செய்யப்பட்ட இருவரது உடல்களும் அடக்கம் செய்வதில் தாமதம் ஏற்பட்டு பரபரப்பு நிலவுகிறது.

சென்னை திருவொற்றியூர் திருநகர் பகுதியைச் சேர்ந்தவர் பத்மா (45). இவரது கணவர் முருகன் ஓமன் நாட்டில் பொக்லைன் டிரைவராக வேலை செய்து வருகிறார். இவர்களது மூத்த மகன் நித்திஷ் (20), தனியார் கல்லூரியில் பிஎஸ்சி 3ம் ஆண்டு படித்து வந்தார். 2வது மகன் சஞ்சய் (15) அதே பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வந்தார்.

நித்திஷுக்கு சரியாகப் படிப்பு வரவில்லை என்று கூறப்படுகிறது. இதனால் ஒவ்வொரு ஆண்டும் தேர்ச்சி பெறாமல் அரியர்ஸ் வைத்து வந்துள்ளார். இந்நிலையில் நித்தீஷ் படிக்காததை சுட்டிக்காட்டி அவரது தாயார் பத்மா அடிக்கடி கண்டித்துள்ளார்.

இதனால் கடும் மன உளைச்சலில் இருந்துவந்த நித்திஷ், தனது தாயையும் தம்பியையும் வீட்டிலேயே கத்தியால் குத்தி கொலை செய்து விட்டு தானும் தற்கொலைக்கு முயன்றார். ஆனால் தற்கொலைக்கு முயன்றும் பயம் காரணமாக தற்கொலை செய்து கொள்ளாமல், பேருந்து நிலையம், கடற்கரை என ஆங்காங்கே சுற்றித் திரிந்துள்ளார். பிறகு பலகை தொட்டிக்குப்பம் அருகே பேருந்து நிறுத்தத்திற்கு போய் அங்கு தூங்கியுள்ளார். அங்கு சென்ற போலீசார் நித்திஷை கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர். இச்சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

▶ கொலை செய்யப்பட்ட தாய் பத்மா, மகன் சஞ்சய்

▶ கைதான நித்திஷ்

‘எனக்கு வாழவே பிடிக்கல...’

தாய், தம்பியை கொலை செய்துவிட்டு தற்கொலை செய்து கொள்ள துணிவில்லாத நித்திஷ் கைது செய்யப்பட்டு சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அப்போது சிறைக்கு போவதற்கு முன்னர், உறவினர்கள் நித்திஷை காவல் நிலையத்தில் சந்தித்து ஏன் இதுபோன்ற தவறை செய்தாய் எனக் கேட்டுள்ளனர். அதற்கு, தந்தை பல ஆண்டு காலமாக ஓமன் நாட்டில் இருக்கிறார். நான் நன்றாக படித்து பெரிய ஆளாக வர வேண்டும் என்பதற்காக தந்தை வெளிநாட்டிலும், தாய் அக்குபஞ்சர் மையத்திலும் பணியாற்றி மிகவும் சிரமப்பட்டு என்னைப் படிக்க வைத்தனர். நான் நன்றாக படிக்க வேண்டும் என்றுதான் நினைத்தேன். ஆனால் என்னால் முடியவில்லை.

அதேநேரத்தில் படி..படி.. என்று அம்மா தொடர்ந்து கொடுத்துவந்த நச்சரிப்பையும் என்னால் தாங்க முடியவில்லை. கடும் மன உளைச்சலுக்கு ஆளானேன். நான் தற்கொலை செய்து கொண்டால் தாயும், தம்பியும் என் பிரிவால் மிகவும் வேதனை அடைவார்கள். அதனால் இருவரையும் கொலை செய்துவிட்டு நானும் தற்கொலைக்கு முயன்றேன். ஆனால் தற்கொலை செய்து கொள்ள துணிச்சல் வரவில்லை. அவசரப்பட்டு இருவரையும் கொலை செய்து விட்டேன். இருவரையும் பிரிந்து பிறகு நான் மட்டும் ஏன் இங்கு உயிர் வாழ வேண்டும். எனக்கு உயிர் வாழப் பிடிக்கவில்லை. நான் மிகப்பெரிய தவறு செய்து விட்டேன். அப்பா என்னை மன்னிக்க வேண்டும் என்று உறவினர்களிடம் கூறி நித்திஷ் கண்ணீர் விட்டு அழுதுள்ளார்.

இந்நிலையில், கொலை செய்யப்பட்ட தாயார் பத்மா, இரண்டாவது மகன் சஞ்சய் ஆகியோரது உடலை போலீசார் கைப்பற்றி சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்கு அனுப்பினர். இந்த கொலைச் சம்பவம் குறித்து ஓமன் நாட்டில் உள்ள பத்மாவின் கணவர் முருகனுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதிர்ச்சி அடைந்து துடிதுடித்த முருகன், இந்தியா வருவதற்கு முயற்சி மேற்கொண்டுள்ளார். ஆனால் அவரது பாஸ்போர்ட் புதுப்பிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. இதனால் இந்தியா திரும்புவதற்கு விமான டிக்கெட் எடுப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதையடுத்து, பாஸ்போர்ட் அதிகாரிகள் ஒத்துழைப்புடன் பாஸ்போர்ட் சரி செய்யப்பட்டு இன்று காலை அல்லது மாலைக்குள் சென்னைக்கு வந்துவிடுவார் என்று கூறப்படுகிறது. முருகன் சென்னைக்கு வந்த பிறகுதான் இருவரது உடல்களும் முருகனிடம் ஒப்படைக்கப்படும் என்பதால் பத்மா மற்றும் சஞ்சய் ஆகியோரின் உடல்கள் ஸ்டான்லி மருத்துவமனையிலேயே பிணவறையில் வைக்கப்பட்டுள்ளது. இதனிடையே மன அழுத்தத்தால் தாயையும், தம்பியும் கொலை செய்துவிட்டு தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ள நித்திஷ், மேலும் மனநலம் பாதிக்கப்பட்டு இருப்பார். அதனால் தற்கொலை போன்ற விபரீதமான முடிவை எடுக்காமல் இருக்க அவருக்கு மனநல சிகிச்சை அளிக்க வேண்டும் என்று அவரது உறவினர்கள் போலீசாரிடம் கோரிக்கை வைத்துள்ளனர்.

மக்களவை தேர்தலில்

வெற்றி பெற்ற தமிழக எம்பிக்கள் நாளை பதவியேற்பு

சென்னை, ஜூன் 24: மக்களவை தேர்தலில் வெற்றி பெற்ற தமிழகத்தை சேர்ந்த 39 எம்பிக்கள் நாளை பதவியேற்கின்றனர்.

இந்தியாவின் 18 மக்களவை தேர்தல் கடந்த ஏப்ரல் 19ம் தேதி முதல் ஜூன் 1ம் தேதி வரை 7 கட்டங்களாக நடந்தது. தமிழகத்தில் உள்ள 39 தொகுதி, புதுச்சேரியில் உள்ள ஒரு தொகுதி என 40 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக கடந்த ஏப்ரல் 19ம் தேதி தேர்தல் நடந்தது. இதில் தமிழகம், புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளை திமுக கூட்டணி கைப்பற்றியது. அதே நேரத்தில் பாஜ அரசு கூட்டணி கட்சிகளுடன் ஆதரவுடன் 3வது முறையாக ஆட்சி பொறுப்பேற்றுள்ளது.

இந்த நிலையில் இன்று நாடாளுமன்றம் கூடுகிறது. இந்த சிறப்புக் கூட்டத்தொடரில் தற்காலிக சபாநாயகர் பர்த்ருஹரி மஹ்தாப் புதிய எம்பிகளுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்க உள்ளார். இதனால், இன்று முதல் தேர்தலில் வெற்றி பெற்ற எம்பிக்கள் பதவியேற்க உள்ளனர். இதற்கிடையில் தமிழக எம்பிக்கள் அனைவரும் நாளை பதவியேற்கிறார்கள். இதுதொடர்பாக விழுப்புரம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற விடுதலை சிறுத்தைகள் கட்சி எம்பி ரவிகுமார் தனது எக்ஸ் வலைத்தளப்பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், ”விசிக தலைவர் திருமாவளவன், நான் உள்ளிட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த 39 எம்பிக்கள் ஜூன் 25ம் தேதி (நாளை) பகல் 1 மணி முதல் 3 மணிக்குள் பதவி ஏற்கிறோம். முதல் நாளான ஜூன் 24ல் மகாராஷ்டிராவைச் சேர்ந்த 15 பேர் உட்பட 280 பேர் பதவி ஏற்கின்றனர்” என தெரிவித்துள்ளார்.

முதல்வருக்கு வாழ்த்து

▶ நாடாளுமன்றத் தேர்தலில் திமுக கூட்டணி போட்டியிட்ட 40 தொகுதிகளிலும் அமோக வெற்றி பெற்றதை அடுத்து, முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலினை சென்னை முகாம் அலுவலகத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி. நேற்று நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

முதுநிலை நீட் தேர்வு தள்ளிவைப்பு

சரியான திட்டமிடல் இன்றி மாணவர்களை அலைக்கழிக்கிறது ஒன்றிய அரசு

சென்னை, ஜூன் 24: முதுநிலை நீட் தேர்வை திடீரென தள்ளி வைத்ததால் மாணவர்கள் அலைக்கழிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என அமைச்சர் மா.சுப்பிரமணியன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் வெளியிட்டுள்ள அறிக்கை:

நீட் தேர்வில் குழப்பங்களும், குளறுபடிகளும் தொடர்ந்து அரங்கேற்றப்பட்டு வருகின்றன. மருத்துவக் கல்வி நுழைவுத் தேர்வான நீட் தேர்வில் நடைபெற்ற முறைகேடு நாட்டில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. தொடக்கத்தில் குற்றச்சாட்டுகளை ஒன்றிய அரசு மறுத்தது. தற்போது தேர்வில் முறைகேடு நடைபெற்றுள்ளதை ஒன்றிய அரசு கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் ஒப்புக்கொண்டுள்ளார். இந்த நிலையில் தேசிய தேர்வு முகமை தலைவராக உள்ள சுபோத்குமாரை நேற்று திடீரென ஒன்றிய அரசு நீக்கியது நீட் தேர்வு குழப்பங்களையும், குளறுபடிகளையும் மெய்ப்பிப்பதாக உள்ளது.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் கண்டனம்

ஒன்றிய அரசின் குழப்பங்களின் தொடர்ச்சியாக நேற்று காலை 9 மணிக்கு நடைபெற இருந்த முதுநிலை நீட் தேர்வை நேற்று முன்தினம் இரவு 9 மணிக்கு திடீரென தள்ளி வைத்துள்ளது. நாட்டில் 297 நகரங்களில் நடைபெற இருந்த இத் தேர்வில் 2,28,757 மாணவர்கள் கலந்து கொள்ள இருந்தனர். இந்நிலையில் சரியான திட்டமிடல் இல்லாமல் மாணவர்களை அலைக்கழிக்கும் நிலையில் ஒன்றிய அரசின் போக்கு உள்ளது. இதனால் மாணவர்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகி பல்வேறு உயிரிழப்புகள் தொடர்ச்சியாக ஏற்படுகிறது என்று நாம் அறிவுறுத்தி வரும் நிலையில், கண்டுகொள்ளாத ஒன்றிய அரசின் மெத்தனப்போக்கால் இன்னும் எத்தனை குழப்பங்களும், குளறுபடிகளும் நடைபெறும் என்று கணிக்க முடியாத சூழல் தான் நிலவுகிறது.

தமிழ்நாட்டின்

மலைப்பகுதி மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு

சென்னை, ஜூன் 24: கேரளாவில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ள நிலையில் தமிழ்நாடு மற்றும் அதை ஒட்டியுள்ள மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது. இதுதவிர கேரள பருவமழையால் தென்மேற்கு அரபிக் கடல் பகுதியில் காற்றழுத்தம் உருவாகியுள்ளது. மேலும் தென்மேற்கு பகுதியில் இருந்து வீசும் காற்றின் வேகம் மாறியுள்ளதால் தமிழ்நாட்டின் குமரிக்கடல் பகுதியிலும் மேலடுக்கு சுழற்சி உருவாகியுள்ளது. அதன் காரணமாக தென் மாவட்டங்களில் சில இடங்களில் மழை பெய்து வருகிறது. இதற்கிடையே மதுரை விமான நிலையத்தில் 102 டிகிரி வெயில் நிலவியது. வட தமிழக உள் மாவட்டங்களின் சமவெளிப் பகுதிகளில் 100 டிகிரியும், தென் தமிழக உள் மாவட்டங்களில் 101 டிகிரியும், வட தமிழக கடலோர மாவட்டங்களில் 100 டிகிரியும் வெயில் பதிவாகியுள்ளது.

இந்நிலையில் மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல் மாவட்டங்களின் மலைப் பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் ஒரிரு இடங்களில் இன்றும் நாளையும் கனமழை பெய்யும் வாய்ப்புள்ளது. இதே நிலை 29ம் தேதி வரை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வெப்பநிலையைப் பொருத்தவரையில் 27ம் தேதிவரை தமிழ்நாடு மற்றும் புதுவையில் அதிகபட்ச வெப்பநிலை பொதுவாக இயல்பை ஒட்டியும், ஓரிரு இடங்களில் 2 டிகிரி செல்சியஸ் முதல் 3 டிகிரி செல்சியசுக்கும் அதிகமாக இருக்கும். சென்னையில் ஓரளவு மேகமூட்டம் காணப்படும்.

TATA

டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை 400013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டுச் சதுக்கம், #6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024..

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு

(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 8 (6) மற்றும் விதி 9(1) கீழ்)

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8 (6) மற்றும் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை மின்–ஏலம் அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிசுகள்/ பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (டிசிஎச்எப்எல்) வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப–கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக 'உள்ளது உள்ளவிடத்தில்' & 'உள்ளது உள்ளவாறு' மேலும் 'உள்ளது எதுவோ அது' அடிப்படையில் 25–07–2024 நாளில் விற்பனை செய்யப்பட உள்ளது. நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய 25–07–2024 நாளில் பிற்பகல் 2.00 மணிக்கு மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024 இடத்தில் 24–07–2024 அன்று மாலை 5 மணி வரை அல்லது அதற்கு முன்பாக டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்து விற்பனை இங்கே கீழே விவரிக்கப்பட்ட குறு விவரங்களின்படி 'உள்ளது உள்ளவிடத்தில் நிபந்தனையில்' ஆனதாகும்:

வ. எண்	கடன் கணக்கு எண் மற்றும் கிளை	கடன்தாரர்(கள்) / உப–கடன்தாரர்(கள்) சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீனம் வகை
1.	TCHHL04 04000100 077049 & TCHIN04 04000100 077176	திருமதி. அபிராமி G & திருமதி. அலமேலு G	ஒப்பந்த எண். TCHHL0404000100077049 இன் கீழ் நிலுவை மற்றும் செலுத்த வேண்டிய தொகை ரூ.24,12,733/– மற்றும் ஒப்பந்த எண். TCHIN0404000100077176 இன் கீழ் நிலுவை மற்றும் செலுத்த வேண்டிய தொகை ரூ.1,42,392/– மொத்தம் செலுத்த வேண்டிய தொகை ரூ.25,55,125/– --- 24.03.2023	ரூ.33,54,000/– (ரூபாய் முப்பத்து மூன்று லட்சத்து ஐம்பத்து நான்காயிரம் மட்டும்)	ரூ.3,35,400/– (ரூபாய் மூன்று லட்சத்து முப்பத்து ஐந்தாயிரத்து நானூறு மட்டும்)	கையக

அசையாச் சொத்து விவரம்: திருநீர்மலை கிராமம், பல்லாவரம் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், தற்போது செங்கல்பட்டு மாவட்டம், D.T.P. No.9/73 மூலம் அனுமதிபெற்ற மனைப்பிரிவில் மனை எண். 9, ரங்கா நகர், பழைய சர்வே எண்கள் 295 & 296, பட்டா எண். 8504 இன்படி, புதிய சர்வே எண்கள். 295/1 & 296/6 இல் அடங்கிய அனைத்துத் துண்டு மற்றும் பகுதி உள்ள நிலம் அடங்கிய சொத்து. **எல்லைகள்: வடக்கில்:** மனை எண். 8, **தெற்கில்:** மனை எண் 10, **கிழக்கில்:** 20 அடி சாலை, **மேற்கில்:** ச. எண் 75 இன் பகுதி, **அளவீடு:** கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்–76 அடி 6 அங்குலம், கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்– 73 அடி 6 அங்கலம், வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்–40 அடி வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்–40 அடி 6 அங்கலம். பம்மல் சார்–பதிவு மாவட்டம் மற்றும் தெற்கு சென்னை பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது, **அட்டவணை B சொத்து:** அட்டவணை –A சொத்தில் நிலத்தின் பாகம் பிரிக்கப்படாதப் பங்கு 225 சதுர அடி பரப்பளவு மற்றும் ஒரு கார் நிறுத்துமிடத்துடன் (பொதுப் பரப்பு & பொதுப் பங்குகள் உட்பட 645 சதுர அடி முகப்பு பகுதியுடன் கூடிய ஃபிளாட் எண் AS–3, இரண்டாம் தளத்தில் உள்ள சொத்து.

ஏலத்தில், பொதுவாக பொதுமக்கள் தனிப்பட்டு தங்கள் ஏலப்புள்ளி(களை) சமர்ப்பிக்க வரவேற்கப்படுகின்றனர். கடன்தாரர்(கள்)/உப–கடன்தாரர்(கள்) ஆகியோருக்கு இந்த அறிவிப்பு பிரசுரமான தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் மேற்கொண்டு வட்டியுடன் மொத்த நிலுவைகளைச் செலுத்த இதன்மூலம் கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது. அவ்வாறு செலுத்த தவறினால் அசையாச் சொத்து திட்டமிட்டபடி விற்பனை செய்யப்படும். ஏலத்தேதிக்கு முன்பாக மேற்கூறிய நிலுவைத்தொகை, வட்டி மற்றும் செலவுகளுடன் (விற்பனை செலவு உட்பட) அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் வழங்கப்பட்டால் அல்லது இவ்வித கடனீட்டுக் கடன்தொகை, வட்டி மற்றும் செலவுகள் செலுத்தப்பட்டுள்ளன என்று அவருடைய திருப்திக்குரியவாறு சான்று அளிக்கப்பட்டால் மின்னணு ஏலம் நிறுத்தப்படும்.

இந்த விற்பனை தொடர்பாக ஏதேனும் பணியை செயல்படுத்திக் கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற நபர், விற்கப்படும் அசையாச் சொத்தில் ஏதேனும் பயனைக் கைப்பற்ற அல்லது கைப்பற்ற முயற்சிக்க நேரடியாக அல்லது மறைமுகமாக ஏலப்புள்ளி அளிக்கலாகாது.

விற்பனையானது கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இல் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் பின்வரும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டது ஆகும்:

குறிப்பு: மின்–ஏலம் ஆனது http://bankauctions.in என்ற இணைய முகப்பு மூலம் 25–07–2024 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணிக்குள் தலா 10 நிமிடங்கள் வரையறுக்கப்பட்ட நீட்டிப்புடன் நடைபெறும்.

விதிமுறைகள் மற்றும் நிபந்தனை: 1. இங்கே கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் கீழே கையொப்பமிட்டவருக்கு நன்கு தெரிந்த வரையில் தெரிவிக்கப்பட்டுள்ளன, ஆனால் கீழே கையொப்பமிட்டவர் இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடுதலுக்கு பொறுப்பேற்க மாட்டார். ஏலப்புள்ளி தொகை, அல்லது ஏலதாரரிடம் ஏதேனும் பூசல் எழுமானால், அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமைக்கு உட்பட்டு அசையாச் சொத்து மீண்டும் ஒருமுறை ஏலத்திற்கு வைக்கப்படும். **2. நிர்ணய விலைக்குக் குறைவாக அசையாச் சொத்து விற்பனை செய்யப்பட மாட்டாது.** 3. ஏலம் உயர்த்தும் தொகை ஆவது: **ரூ.10,000/–** ரூபாய் பத்தாயிரம் மட்டும்) 4. சொத்து கொள்முதலுக்காக சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஏலப்புள்ளிகளும் **கிளை முகவரியில் மாற்றத்தக்க வகையில் "டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிட்."** பெயரிலான கேட்பு வரைவோலை மூலம் மேற்குறிப்பிட்டவாறான முன்வைப்புத்தொகையால் இணைக்கப்பட்டிருக்கப்பட வேண்டும். வெற்றிபெறாத ஏலதாரர்களுக்கு ஏலம் முடிந்த பிறகு கேட்பு வரைவோலைகள் திருப்பியளிக்கப்படும். NEFT/RTGS/IMPS வழியே முன்வைப்புத்தொகைச் செலுத்துவதற்கு, அதிகாரப்பூர்வ அதிகாரியை தொடர்பு கொள்ளவும். 5. உயர்ந்தபட்ச ஏலதாரர், ஏலப்புள்ளி அளிக்க அவர் எப்போதும் சட்டப்பூர்வத் தகுதியடைந்தவர் மேலும் ஏலப்புள்ளித் தொகை நிர்ணய விலைக்குக் குறைவில்லாதது என்பதைப் பொறுத்து வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்படுவார். அளிக்கப்பட்ட விலை பற்றாக்குறையென தெளிவாகக் காணப்படுகையில் உயர்ந்தபட்ச ஏலப்புள்ளியை ஏற்க மறுப்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். 6. பதிவு செய்யப்பட்ட காரணங்களுக்காக, விற்பனை ஒத்தி வைத்தல்/நிறுத்துதல் என்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். **7. முன் அனுமதியில் 18–07–2024 அன்று காலை 11 மணி முதல் மாலை 5.00 மணிக்குள் அசையாச் சொத்தினை பார்வையிடலாம்.** 8. வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்பட்ட நபர், இவ்வித அறிவிப்புக்குப் பிறகு உடனடியாக, 24 மணி நேரத்திற்குள் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்வைப்புத்தொகை உள்ளடக்கமாக கொள்முதல் பணம்/ ஏலப்புள்ளித் தொகையின் இருபத்தைந்து சதவீதத்தைச் செலுத்த வேண்டும் மேலும் இவ்விதம் செலுத்தத் தவறினால், சொத்து உடனடியாக புதிதாக ஏலத்திற்கு வைக்கப்படும்/தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். 9. மேற்கூறியவாறு முதற்கட்டத் தொகைச் செலுத்தப்பட்டு விட்டால், செலுத்த வேண்டிய கொள்முதல் பணத்தின் மீதித்தொகையானது சொத்து விற்பனை உறுதியான தேதியிலிருந்து, இந்த நாளைத் தவிர்த்து, 15ஆம் நாளில் அல்லது அதற்கு முன்பாக, அல்லது 15ஆவது நாள் ஞாயிற்றுக்கிழமை அல்லது பிற விடுமுறையாக அமைந்தால், 15வது நாளுக்குப் பிந்தைய முதல் அலுவலக நாளில் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். 10. மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் பணப்பட்டுவாடாச் செய்யத் தவறும்பட்சத்தில், சொத்து புதிதாக ஏலத்துக்கு வைக்கப்படும்/ தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். முன்வைப்புத்தொகை உட்பட செலுத்தியத் தொகை டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் மூலம் கைக்கொள்ளப்படும். மேலும் தவறும் கொள்முதலாளர் சொத்துக்குரிய அனைத்து கோருரிமைகளையும் இழப்பார். 11. சொத்துக்கு உட்பட்ட, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்கு தெரிந்த, ஏதேனும் வில்லங்கங்களின் விவரங்கள்: மேற்கூறிய அட்டவணைப்படி. திட்டமிடும் ஏலதாரர் சொத்து வரி, மின்கட்டணம் ஏனைய சட்டப்பூர்வ பொறுப்பு நிலுவைகள் உட்பட சொத்து மீதான வில்லங்கங்கள் குறித்து தங்கள் சொந்த தனி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார். 12. அனைத்து பிற விவரங்களுக்கு அல்லது மின்–ஏலம் மீதான இயங்குதள பயிற்சி நடைமுறைக்கு, எதிர்நோக்கும் ஏலதாரர்கள் சேவை வழங்குநர், M/s.4குளோசர், பிளாக் எண்.605ஏ, 6 ஆவது தளம், மைத்ரிவனம் கமர்ஷியல் காம்ப்ளெக்ஸ், அமீர்பேட், ஹைதராபாத்–500038 இன் ஒருங்கிணைப்பாளர்கள் திரு.அரிதித் குமார் தாஸ், கைபேசி எண் 8142000725, 8142000066, 8142000062 மின்னஞ்சல் முகவரி: arijit@bankauctions.in மற்றும் மின்னஞ்சல்: info@bankauctions.in அல்லது மணீஷ் பன்சால், மின்னஞ்சல் முகவரி Manish.Bansal@tatacapital.com அதிகாரப்பூர்வ அதிகாரி கைபேசி எண் 8588983696 தொடர்பு கொள்ளலாம். உங்கள் விசாரணையை வாட்ஸ்அப் எண் – 9999078669–க்கு அனுப்பவும். 13. உயர்ந்தபட்சமாக அறிவிக்கப்பட்ட ஏலத் தொகை மீது 1% மூலத்தில் வரி பிடித்தம் பொருந்தும். மேலும் அது உயர்ந்தபட்ச ஏலதாரரால் செலுத்தப்பட வேண்டும். பணப்பட்டுவாடா ஆனது உரிமையாளர்/ கடன்தாரர்(கள்) பான் எண்ணில் செலுத்தப்பட வேண்டும் மேலும் சலான் நகல்பிரதி எங்கள் நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். 14. மேற்கூறிய விவரங்களுக்கு கீழ்க்காணும் கடனீட்டுக் கடனீந்தோரின் இணையதளத்தில் கொடுக்கப்பட்ட இணைப்பை படிக்கவும் http://surl.li/ukgjd

15. மேலும் https://www.tatacapital.com/property–disposal.html **இணைப்பையும் காண்க.**

கவனத்தில் கொள்க– டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆனது இந்த சொத்து விற்பனை/ஏலத்துக்காக குறிப்பிட்டுள்ள ஏலம் விடும் கூட்டுதாரரைத் தவிர ஏதேனும் தரகர்/முகவரை நியமிக்கவில்லை. விருப்பமுள்ள நபர்கள் இது சம்பந்தமாக அனைத்து சந்தேகங்கள் மற்றும் விசாரணைக்கு கீழேக் கையொப்பமிட்டவர் அல்லது அதிகாரப்பூர்வ அதிகாரியை மட்டும் தொடர்பு கொள்ள வேண்டும்.

இடம் : செங்கைஅண்ணா,
நாள்: 24.06.2024

ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி
டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

“போற்றுபவர் போற்றட்டும், புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும், தொடர்ந்து செல்வேன்;
ஏற்றதொரு கருத்தைஎன துள்ளம் ஏற்றால்
எடுத்துரைப்பேன், எவர்வரினும் நில்லேன், அஞ்சேன் !’

-கவியரசு கண்ணதாசன்

கவியரசு கண்ணதாசன் அவர்களின் 98ஆவது பிறந்த நாள்

தமிழ்நாடு அரசின் சார்பில்
கவியரசு கண்ணதாசன்
அவர்களின்
திருவுருவச் சிலைக்கு

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,

மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,

சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

செ.ம.தொ.இ/615/வரைகலை/2024

நாள்: 24.6.2024, திங்கள்கிழமை, காலை 8.30 மணி
இடம்: கோபதி நாராயணா சாலை, தியாகராய நகர், சென்னை

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in | **இயக்குநர்,** செய்தி–மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 600 009.